ॐ

ஓம்

ஸ்ரீ குருப்யோ நம :

# ஸ்ரீ ஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம்

## வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட்

(பதிவு எண்: 226 / 1992)




சத்திரப்பட்டி சாலை,
வேதபுரீ, தேனி. - 625 531






ஓம்

ஸ்ரீ குருப்யோ நம:

# உள்ளம் தோறும் வள்ளுவம்

## வள்ளுவம் வழங்கும் வாழ்வியல்

## ஸனாதன நெறியில் வள்ளுவம்

# ஸ்ரீஸ்வாமீ பூர்ணாநந்தர்

## பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகளின் சீடர்



நாள் :
05, புரட்டாசி 2025

Date:
21, September 2025

www.vedaneri.org


வகுப்பு 05



# பாயிரம்

## அதிகாரம் : 2

### வான்சிறப்பு – மழையின் பெருமை



ஓம் ஜலபிம்பாய வித்மஹே
நீலபுருஷாய தீமஹி
தந்நோ வருணப் பிரசோதயாத்.

- அறம் முதலானவை நிலைத்து நிற்க மழையின் இன்றியமையாமையைக் கூறுதல்.
- மழை இறைவனின் செயல் ஆகையால் கடவுள் வாழ்த்தின் பின் வைக்கப்பட்டது.
- உலகம் நடத்தற்கு முதல் காரணம் கடவுள். துணைக் காரணம் மழை.





## விஷயம்

உலகம் நடத்தலுக்குக் காரணம்

மழை (1 - 7)

அறம் பொருள் இன்பம் நிலைக்கக்

காரணம் மழை (8 - 10)



## பயன்

1. உயிர் வாழ்க்கை.
2. அறம், பொருள், இன்பம்.

தண்ணீரின் முக்யத்வம் அறியவேண்டும். இயற்கை வளங்களை பாழ்படுத்தக் கூடாது. மரங்களை வளர்க்க வேண்டும். மழைநீரைச் சேமிக்க வேண்டும். ஒழுக்கத்தை கடைபிடிக்க வேண்டும்.

## உலகம் நடத்தலுக்குக் காரணம் மழை (1 - 7)

1. மழை = அமிர்தம்
2. உணவாகவும் உணவுக்குக் காரணமாகவும் இருப்பது மழை.
3. மழையின்மை – உணவின்மை – பசி – துன்பம் – மரணம்
4. விவசாயம் நடவாது.
5. மக்களின் துன்பத்துக்கும் இன்பத்துக்கும் காரணம் மழை.
6. இயற்கை (நிலவளம்) கெடும்.
7. கடல் வளம் குறையும்.

## அறம் பொருள் இன்பம் நிலைக்கக் காரணம் மழை (8 - 10)

8. இறைவழிபாடு நின்றுபோகும்.
9. இல்லறம், துறவறம் இரண்டும் நிலைத்து நில்லாமல் போய்விடும்.
10. பொருள், இன்பம் குறைந்து போகும். அடிப்படை ஒழுக்கம் இல்லாமல் போய்விடும்.

## 1. வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
## தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று.

மழையானது தொடர்ந்து இருக்க, உயிரினங்கள் அழிந்து போகாமல் இருந்து வருதலால் அம்மழைதான் (உயிர்களுக்கு) அமிர்தம் என்று அறிய வேண்டிய தன்மை உடையதாகும்.

மழை = அம்ருதம் = சாவாமருந்து = உயிர் வாழ்க்கையின் ஆதாரம்

இப்பூமியில் உயிரினங்கள் தொடர்ந்து இருந்து வருவதற்கு மழையே காரணமாக இருக்கிறது.



## 2.துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை.

உண்பவர்களுக்கு உண்பதற்கு நல்ல உணவுகளை உண்டாக்கிக் கொடுப்பதும் உண்பவர்களுக்கு நல்ல உணவாக இருப்பதும் மழைநீரே யாகும்.

(மற்ற உணவுப்பொருள்கள் உண்டாவதற்குக் காரணமாகவும் தானே நேரடியாக உணவாகவும் இருப்பது நீராகும். )

துப்பு = உணவு, வலிவு







# 3.விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து உள்நின்று உடற்றும் பசி.

மழையானது பெய்ய வேண்டிய காலத்தில் பெய்யாமல் பொய்க்குமாயின் விரிந்த கடலால் சூழப்பட்ட பரந்த உலகத்தில் பசியானது நிலைபெற்றிருந்து உயிர்களைத் துன்புறுத்தும்.

விண் = ஆகாயம் = மழை. இடவாகு பெயர்.

கடல் என்னும் விரிந்த நீர்நிலை இருந்தாலும் பரந்த இந்த உலகத்தில் மழை இல்லையென்றால் உணவு உற்பத்தி இல்லை. உணவில்லையென்றால் உயிர்கள் பசியினால் துன்புற்று அழிந்துபோகும்.





## 4.ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்
## வாரி வளங்குன்றிக் கால்..

மழையென்னும் வரவின் செழிப்பு குறைந்துவிட்டால் உழவர்கள் ஏரினால் உழுதல் முதலான உழவுத் தொழிலைச் செய்யமாட்டார்கள்.

புயல் = மேகம் = மழை. கர்த்தாவாகுபெயர்.
உணவின்மைக்குக் காரணம் கூறப்பட்டது.

இறப்புக்குக் காரணம் பசி. பசிக்குக் காரணம் உணவின்மை.
உணவின்மைக்குக் காரணம் விவசாயமின்மை.
விவசாயம் இன்மைக்குக் காரணம் மழையின்மை.



# 5.கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை.

பெய்யாமல் இருந்து மக்களை துன்புறுத்துவதும் துயருற்ற மக்களுக்கு உறுதுணை புரியும் வண்ணம் பொழிந்து, துன்பத்தைப் போக்கி இன்பம் அளிப்பதும் போன்ற அனைத்தையும் செய்யவல்லது மழையாகும்.

மற்று = வினைமாற்றுப் பொருள்

ஆங்கு = மறுதலைத் தொழில் உவமைப் பொருள்.

எல்லாம் = எல்லாம் வல்லது (அவாய் நிலை)

மழையினது வல்லமை சொல்லப்பட்டது.

மக்கள் வாழ்க்கையைக் கெடுப்பதும் காப்பதும் மழையாகும்.

## 6.விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
## பசும்புல் தலைகாண்பு அரிது.



வான்மேகத்திலிருந்து மழைத்துளிகள் விழுந்தால் காண்பது அல்லாமல், விழவில்லையென்றால் அப்பொழுதே பசும்புல்லினுடைய தலையையும் காணுதல் இயலாது.

விசும்பு = வானம் = மேகம் = இடவாகுபெயர்.

மற்று = வினைமாற்று

மழை இல்லையென்றால், இப்பூவுலகில் ஓரறிவு உயிரும் இல்லை என்பதாகும்.

## 7.நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
## தான்நல்கா தாகி விடின்.

மேகமானது கடலிலிருந்து நீர் முகந்து மீண்டும் கடலிடத்துப் பெய்து கொடுக்கவில்லை என்றால் அளவிடர்க்கரிய பெருங்கடலும் தன் வளங்களில் குறையும்.

தன்நீர்மை குன்றல் = தன் இயல்பு குறைதல் = நீர்வாழ் உயிரினங்கள், முத்து, பவளம் முதலிய வளங்கள் குறைதல்.

தடிந்து = குறைத்து = முகத்து

மழைக்கு முதல் ஆகிய கடலுக்கும் மழை வேண்டும் என்பதாகும்.

மழை பெய்யவில்லையென்றால் நிலவளம் மட்டுமல்ல, கடல்வளமும் குறையும்.



# 8.சிறப்பொடு பூசனை செல்லாது வானம் வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

மழை பெய்யவில்லை என்றால் தேவர்களுக்கும் இவ்வுலகத்தில் திருவிழாவுடன் கூடிய பூஜை நடைபெறாது.

பூசனை = நித்ய பூஜை = ஸ்நானம், ஸந்த்யா வந்தனம், தேவபூஜை முதலானவை.

சிறப்பு = நைமித்திகம் = சிறப்புத் திருவிழாக்கள்.

மழை பெய்யவில்லை என்றால் தேவபூஜையும் நடக்காது.

# 9.தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம் வானம் வழங்கா தெனின்.



மழை பெய்யவில்லை என்றால் தானம் செய்வதற்குரிய இல்வாழ்க்கை, தவம் செய்வதற்குரிய துறவு வாழ்க்கை ஆகிய இரண்டு அறங்களும் அகன்ற இவ்வுலகில் இருக்காது.

வானம் = மழை = இடவாகு பெயர்.

தானம் = அறவழியில் வந்த பொருளை உரியவர்க்கு மரியாதையோடும் மகிழ்ச்சியோடும் கொடுத்தல். பெரும்பான்மை பற்றி இல்லறத்தைக் குறிப்பதாகும்.

தவம் = மனம் பொறிகளின் வழிச் செல்லாமல் விரதம் முதலானவைகளால் கட்டுப்படுத்துதல். பெரும்பான்மை பற்றி துறவறத்தை குறிப்பதாகும்.



மழை இல்லை என்றால் அறம் கெடும்.

## 10.நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும் வான்இன்று அமையாது ஒழுக்கு.

எத்தகையவருக்கும் நீரில்லாமல் பொருள், இன்பமாகிய உலக வாழ்க்கை நடக்காது. அதுபோல மழை இல்லாமல் எல்லாக் காலத்திலும் எல்லா இடத்திலும் தண்ணீர் இருத்தல் நடக்காது.

அல்லது

நீர் இல்லாமல் உயிர் வாழ்தல் இல்லை. யார் எத்தகைய திறமை உடையவராக இருந்தாலும் மழை இல்லாமல் அவரது ஒழுக்கத்தைக் கடைபிடித்தல் அரிதாகும்.

பொருள், இன்பமான உலக வாழ்க்கை நீரில்லாமலும் நீரானது மழையில்லாமலும் இல்லை. மழை இல்லாமல் ஒழுக்கம் இல்லை. ஒழுக்கம் இல்லாமல் மழை இல்லை.





1. Youtube Channels:

   Swami Omkarananda

   Vedapuri Events

   Swami Purnananda Tamil



2. Instagram - swami om karananda
3. Facebook - Swami omkarananda
4. Facebook Group - Theni Swami Chidbhavananda Ashramam
5. Whatsapp Channel - Theni Swami Chidbhavananda Ashramam

94430 51910 www.vedaneri.org thirukkuralclasses@gmail.com